www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2022

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

# 1st Term Examination - 2022

| | | | | |
|---|---|---|---|---|
| நாடகமும் அரங்கியலும் Drama & Theater | Three Hours / Gr -12 (2023) | 58 | T | I,II |

## பகுதி I

- **இப்பகுதியின் எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ***1 – 40* வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடைகளைத் தெரிவு செய்க.**

01. பின்வரும் கலைவடிவங்களில் வெளிக்கலையாகவும், ஆற்றுகைக் கலையாகவும் கூறப்படக்கூடிய கலை வடிவம்.
1) ஓவியம் 2) சிற்பம் 3) நடனம்
4) இசை 5) கட்டடம் ( )

02. 'அழகைக் கண்டு பிடிப்பதும், அதனை வெளிப்படுத்துவதுமே கலை' எனக் குறிப்பிட்டவர்.
1) மாதுசேதுங் 2) இராமதாஸ் முகர்ஜி 3) குரேசோ
4) அரவிந்தர் 5) ஆனந்தக்குமாரசுவாமி ( )

03. இந்தியக் கலையின் உட்பொருளாய் அமைந்திருப்பது.
1) ஆத்ம ஞானம் 2) இரசனை உணர்வு 3) யதார்த்த அனுபவம்
4) உணர்ச்சி முதன்மை 5) களியாட்டம் ( )

agaram.lk

04. பல ஆற்றுகைக் கலைகளை தன்னகத்தே கொண்டிருக்கும் ஆற்றுகைக் கலைவடிவம்
1) நடனம் 2) இசை 3) ஓவியம்
4) நாடகம் 5) வில்லிசை ( )

05. பார்ப்போர் நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும் போது தமக்குப் பிடித்த பகுதியை 'திரும்ப நிகழ்த்துமாறு' (Once more) கேட்டு இரசிக்கின்ற ஆற்றுகை வடிவம்
1) பலே 2) கூத்து 3) வில்லுப்பாட்டு
4) நடன நாடகம் 5) ஒப்போரா ( )

06. 'நாடகம் என்பது யாதேனும் ஒரு செயலை போலச் செய்தலாகும்' எனக் கூறியவர்.
1) பரதர் 2) போனாட்ஷா 3) சூரிய நாராயண சாஸ்திரி
4) ஹொனிக்மன் 5) அரிஸ்ரோட்டில் ( )

07. பின்வரும் ஆற்றுகைக் கலைகளில் 'கதை சொல்லுகின்ற' கலையாக அமையாதது.
1) கதாப்பிரசங்கம் 2) வில்லுப்பாட்டு 3) நடனம்
4) கதாகாலோட்ஷபம் 5) கதை சொல்லல் (Story telling) ( )



agaram.lk

08. பின்வரும் கலைகளில் படைப்பாளியின் துணையின்றி நயக்க கூடிய கலை
1) நாடகம் 2) நடனம் 3) இசை
4) இலக்கியம் 5) பலே ( )

09. நடிகனின் தொடர்பாடலில் முதன்மை வகிப்பது.
1) கண் 2) உடல் 3) பேச்சு 4) சைகை 5) சொல் ( )

10. நடிப்பில் 'முறைமை நடிப்பு' பற்றிய கோட்பாட்டாளர்.
1) பிரக்ட் 2) பரதர் 3) ஸ்ரனிஸ்லவஸ்கி
4) மேய ஹோல்ட் 5) குறொட்டோவ்ஸ்கி ( )

11. பின்வருவோரில் தனது நாடகங்களை கவிதைகளில் எழுதியவர்.
1) நா. சுந்தரலிங்கம் 2) பேரா. க. கணபதிப்பிள்ளை
3) குழந்தை ம. சண்முகலிங்கம் 4) முருகையன்
5) க. பாலேந்திரா ( )

12. பின்வரும் நாடக எழுத்துருக்களில் செந்நெறிக்கால எழுத்துரு.
1) கோடை 2) எந்தையும் தாயும் 3) இடிப்பஸ் மன்னன்
4) இராவணேசன் 5) ஒரு பாவையின் வீடு ( )

13. நாடகத் தயாரிப்பு ஒன்றுடன் தொடர்புபடும் பின்வரும் பணிகளை கருதுக.
அ) பாத்திரங்களை தெரிவு செய்தல்.
ஆ) திட்டமிடுதல்.
இ) ஒத்திகை நடத்துதல்.
ஈ) விளம்பரம் செய்தல்
உ) நாடகத்துக்கான நிதியை திரட்டுதல்.
இப்பணிகளில் தயாரிப்பாளரின் பணிகள்
1) அ, ஆ, இ 2) ஆ, ஈ, உ 3) அ, ஆ, உ
4) இ, ஈ, உ 5) அ, இ, ஈ ( )

14. நாடக ஆக்க கூறுகளில் இலக்கியத்துடன் தொடர்புபடுவது
1) நடிப்பு 2) பாடல்கள் 3) இசை
4) காட்சி விதானிப்பு 5) நாடக பாடம் ( )

15. பின்வருவனவற்றில் 'அரங்கு' என்பதற்கு பொருத்தமற்ற கூற்று
1) ஆற்றுகை நிகழும் இடம் 2) ஆற்றுகைக்குரிய செயற்தொகுதி
3) ஆற்றுவோர் பார்ப்போர் இணையும் இடம் 4) உறை நிலையான அரங்க கட்டடம்
5) பார்த்தலுக்கான வெளி ( )

16. நாடகத்தின் முதன்மையான படைப்பாளியாக கருதப்படுபவர்
1) நெறியாளன் 2) நடிகன் 3) தயாரிப்பாளன்
4) நாடக எழுத்தாளன் 5) ஒளி விதானிப்பாளன் ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

17. கிரேக்க அரங்கில் குறிப்பிடப்படும் 'கிப்போ கிரைட்' (Hipokrite) என்னும் சொற்பதத்தின் ஆங்கில மொழியிலான கருத்து
    1) நடிகன் 2) பதில் சொல்பவர் 3) வியாக்கியானிப்பவர்
    4) பாசாங்கு செய்பவர் 5) போலச் செய்பவன் ( )

18. பின்வரும் கூற்றுக்களுள் கிரேக்க அரங்குடன் தொடர்புபடாத கூற்று
    1) ஒரு நடிகர் பல பாத்திரங்களை ஏற்றார்.
    2) நடிகர் அனைவரும் வேடமுகம் அணிந்தனர்.
    3) கோரசில் ஆண், பெண் இருபாலரும் இருந்தனர்.
    4) முதல் நடிகனாக தெஸ்பிஸ் கருதப்பட்டார்.
    5) நடிகர் உயரமான பாதணி அணிந்தனர். ( )

19. 'வனதேவதைகளின் நாடகம்' என அழைக்கப்பட்ட நாடக வகை
    1) ரஜடி 2) கொமடி 3) கொமேடியா டெல் ஆர்த்தே
    4) கபுகி 5) சற்றயர் ( )

20. கிரேக்க வட்டப்பேரரங்கில் பிரதான நடிப்பிடமாக அமைந்தவெளி .
    1) வட்டவெளி 2) நீள்சதுர மேடைவெளி 3) அரை வட்ட வெளி
    4) படிவரிசையான வெளி 5) முக்கோணத்தளம் ( )

21. கிரேக்க அரங்கில் 'மூன்றாவது நடிகனை' தோற்றுவித்தவர்
    1) சோபோகிளிஸ் 2) ஏஸ்கிலஸ் 3) யூரிப்பிடிஸ்
    4) அரிஸ்ரோபென்ஸ் 5) பிளேட்டஸ் ( )

22. கிரேக்க அரங்கில் நேரடியாக மேடையில் காட்ட முடியாத சம்பவங்களை, வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்திய உபாயம்
    1) கோரஸ் 2) அரங்க பொறிகள் 3) பாடல்கள்
    4) காட்சித்திரைகள் 5) செய்தியாளன் ( )

23. கிரேக்கத்தின் டித்ராம் பாடல்களை இலக்கிய நிலைப்படுத்தியவர்
    1) தெஸ்பிஸ் 2) ஏஸ்கிலஸ் 3) ஆரியோன்
    4) அரிஸ்ரோட்டில் 5) பிளேற்றோ ( )

24. ஏஸ்கிலஸ் எழுதிய 'ஒறெஸ்ரியா' என்ற முக்கூட்டு நாடகத் தொகுதியில் இடம்பெற்ற நாடகங்கள்
    1) அகமெம்னன், ரக்னே, த பேர்சியன்ஸ்
    2) த பேர்சியன்ஸ், த சோபரி, எலற்றா
    3) புறமீதியஸ் பௌண்ட், த இயூ மெனைட்ஸ், த சோபோரி
    4) அகமெம்னன், த சோபோறி, த இயூமெனைட்ஸ்
    5) எலெக்ரா, அஜாக்ஸ், ரக்னே ( )

25. கிரேக்க ரஜடி நாடக ஆசிரியர்களில், பெண்களை அவல நாயகிகளாக மையப்படுத்திய பல நாடகங்களை எழுதியவர்.
    1) தெஸ்பிஸ் 2) ஏஸ்கிலஸ் 3) சோபோகிளிஸ்
    4) யூரிப்பிடீஸ் 5) செனேக்கா ( )

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

26. பின்வரும் கூற்றுக்களை கருதுக.
அ) துன்பம் பயங்கரம் என்பவற்றை அடித்தள உணர்வாக கொள்ளல்.
ஆ) சமகால மக்களின் குறை குற்றங்களை வெளிப்படுத்தல்
இ) துன்பம் மலிந்த வாழ்வை துணிவோடு வாழத் தூண்டுவது
ஈ) கற்பனை அழகும் மொழிவளமும் நிறைந்திருத்தல்
உ) மத்திய தர வர்க்க மக்கள் வாழ்வு நிலையை பேசுபொருளாக கொள்ளல்
மேலுள்ள கூற்றுக்களில் கிரேக்க கொமடி நாடகங்களுடன் தொடர்புடைய கூற்றுக்கள்
1) அ, ஆ, இ    2) இ, ஈ, உ    3) அ, ஆ, உ
4) ஆ, இ, உ    5) ஆ, ஈ, உ    (    )

27. ‘பாத்திர வகிபாகம்’ என்பதற்கு மிகவும் பொருத்தமாக அமையும் கூற்று
1) பாத்திரமொன்றின் பண்புகள்
2) பாத்திரத்தின் பௌதிக குணங்கள்
3) நடிகனுக்கும் பாத்திரத்துக்குமான தொடர்பு
4) நாடகத்தில் பாத்திரம் வகிக்கும் இடம்
5) பாத்திரமொன்றின் பல்வேறு சமூக நிலைகள்    (    )

28. முதலாம் உலகப் போருக்குப் பின்னர் ‘ஊம’ நாடக முறைமைக்கு அத்திவாரமிட்ட ஐரோப்பிய நெறியாளர்
1) யக்குவிஸ் கோப்பா    2) ஓகஸ்டஸ்    3) மேயஹோல்ட்
4) பீற்றர் புறூக்    5) மார்சல் மாஸ்யூ    (    )

29. நடிப்புச் செயற்பாட்டில் ‘மறுதலைப் பாகமாடுதல்’ என்பது
1) நடிகன் பாத்திரமாகுதல்
2) பாத்திரங்களை மீளமீள நடித்துப் பார்த்தல்
3) எதிரெதிர்பாத்திரமேற்பவர் தமது பாகங்களை மாறி நடித்துப் பார்த்தல்
4) பாத்திரத்தினை பின்பகுதியில் இருந்து முன்பகுதியை நோக்கி நடித்து பார்த்தல்
5) நடிபாகங்களை மாறிமாறி நடித்துப் பார்த்தல்    (    )

30. ‘கூத்த யாத்திரை’ என்ற அரங்க அனுபவம் தொடர்பான நூலை எழுதியவர்.
1) பேரா. சு. வித்தியானந்தன்    2) பேரா. சி. மௌன குரு
3) கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை    4) கலாநிதி. சி. ஜெய்சங்கர்
5) குழந்தை ம. சண்முகலிங்கம்    (    )

31. ‘புனித தன்மையின் பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தை கோலங்களின் தொகுப்பே சடங்கு’ எனக் கூறியவர்.
1) ஜோர்ஜ் தொம்சன்    2) பக்த வத்சல பாரதி    3) கா.சிவத்தம்பி
4) பியேட்ஸிலி    5) மாசேதுங்    (    )

32. மத்திய கால ஐரோப்பாவில் நாடகத்தின் தோற்றத்துக்கு காரணமான ‘சடங்கு’ எனக் கருதப்படுவது
1) டயோனீசியஸ் சடங்கு    2) லெனே விழா    3) ஈஸ்டர் சடங்கு
4) சம்போஷா சடங்கு    5) அபிடாஸ் பாடுகள்    (    )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

33. இடிப்பஸ் மன்னன் நாடகத்தில் வரும் “அந்தோ அனைத்தும் வெளி வந்து விட்டது, அனைத்தும் அறியப்பட்டு விட்டது இதற்கு மேல் ஒளிவு மறைவு எதுவுமில்லை” என்ற உரையாடலை பேசும் பாத்திரம்

1) இடிப்பஸ் 2) கோரஸ் 3) அனுக்கத்தான்
4) தெய்ரீரியஸ் 5) கிறியோன் ( )

34. இடிப்பஸ் மன்னன் நாடகம் கிரேக்கத்தில் நிகழ்த்தப்பட்ட போது அதில் நடித்திருக்க கூடிய நடிகர்கள்

1) 6 பேர் 2) 5 பேர் 3) 12 பேர் 4) 3 பேர் 5) 2 பேர் ( )

35. சங்க காலத்தில், கோடு, முழவு போன்ற இசைக்கருவிகளை இசைத்தோர்

1) பாணர் 2) கோடியர் 3) விரலியர் 4) பொருணர் 5) வயிரியர்
( )


36. திருக்குறளில் குறிப்பிடுகின்ற அரங்கு

1) அம்பலம் 2) பண்ணை 3) களரி
4) கூத்தாட்டவை 5) எருமன்று ( )

37. “மொட்டைத் தலையுடன் ஒற்றைப் பிராமணன் முன் இதோ வாறானே” என்ற நாடகப்பாடலை பாடுகின்ற பாத்திரம்


1) மன்மதன் 2) காத்தவராஜன் 3) பூதத்தம்பி
4) சத்தியவான் 5) கோவலன் ( )

38. அருகிலுள்ள படத்தில் காணப்படும் நாடக ஆசிரியர்



1) அரிஸ்ரோட்டில் 2) சோபோகிளிஸ்
3) யூரிப்பிடீஸ் 4) ஏஸ்கிலஸ்
5) ஷேக்ஸ்பியர் ( )

39. இப்படத்திலே காட்டப்பெற்றுள்ள ஆங்கப் பொறி



1) பெரிக்ரோய் 2) எக்சிக்ளோமா
3) டியூக் எக்ஸ் மெஷினா 4) ஸ்கெனே
5) சைக்ளோறாமா ( )

40.



படத்திலுள்ள நாடக வகை

1) கிரேக்க ரஜடி
2) ஒப்பேரா
3) சற்றயர்
4) பலே
5) நடன நாடகம் ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி II

❖ **உப பகுதி A இலிருந்து இரண்டு வினாக்களையும் உப பகுதி B இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

### உப பகுதி A

01. 1) ஆற்றுகைக் கலையின் இயல்புகளை உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

2) அரங்க கலையை ஏனைய இரு ஆற்றுகைக் கலைகளுடன் ஒப்பிட்டு வேறுபடுத்துக. (5 புள்ளிகள்)

3) ஆற்றுகைக் கலைகளில் 'பார்ப்போனின்' முக்கியத்துவத்தினை விபரிக்குக. (5 புள்ளிகள்)

02. 1) 'நடிப்பு' என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? (5 புள்ளிகள்)

2) நடிப்புத் தொடர்பான வேறுபட்ட இரண்டு கோட்பாடுகளை முன்வைத்து ஒப்பிடுக. (10 புள்ளிகள்)

03. கிரேக்கத்தில் ரஜடி நாடகத்தின் வளர்ச்சியை, ரஜடி நாடக ஆசிரியர்களின் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

1) ஏஸ்கிலஸ்
2) சோபோகிளிஸ்
3) யூரிப்பிடீஸ் (5x3=15 புள்ளிகள்)

### உப பகுதி B

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

04. சோபோகிளிசின் இடிப்பஸ் மன்னன் நாடகத்தினை சிறந்த 'ரஜடி' நாடகமாகக் கொள்ளமுடியுமா? என்பதனை எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்வதனூடாக ஆராய்க. (15 புள்ளிகள்)

05. 'சடங்குகள் சமூக ஒழுங்கமைப்புக்கு உதவுகின்றன என்பர்' நீர் அறிந்த சடங்கொன்றினை விபரித்து அச்சடங்கு அது நிகழ்த்தப்படும் சமூக ஒழுங்கமைவுக்கு உதவும் முறைமையினை விபரிக்குக. (15 புள்ளிகள்)

06. மேல்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) சற்றயர்
2) ஊமம்
3) இசைநாடகம்
4) பலே
5) நடனநாடகம்

(5x3=15 புள்ளிகள்)



agaram.lk